## ஆரோவில் ஊடகத் தகவல் தாள்

ஆரோவில், உலகெங்கிலுமிருந்து 50,000 நபர்கள் வரை வசிப்பதற்கேற்ப தென்-கிழக்கு இந்தியாவில் சோழமண்டல கடற்கரைக்கு அருகில், பாண்டிச்சேரிக்கு வடக்கே சுமார் 10 கி.மீ தொலைவிலும் மற்றும் சென்னைக்கு தெற்கே 150 கி.மீ தொலைவிலும், பெரும் பகுதி தமிழ்நாடு மாநிலத்தில் அமையப்பெற்று, திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள ஒரு நகரமாகும். ஆரோவில் என்பது, ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை முயற்சிகளுக்கான ஓரிடமாகும். மனித ஒருமைப்பாட்டை அடைவதே ஆரோவில்லின் இலட்சியம் ஆகும்.

### வரலாறு

மனித ஒற்றுமைமீதான பரிசோதனைக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு உலகளாவிய - சர்வதேச நகரம் என்ற கருத்தாக்கமானது, இந்தியாவின் மகத்தான தத்துவஞானியும், யோகியுமான ஸ்ரீ அரவிந்தர் அவர்களின் எழுத்துக்களிலிருந்து முதலில் உருவானதாகும். ஸ்ரீ அரவிந்தரின் சக ஆன்மீக பணியாளரும் “அன்னை” என அறியப்படுபவருமான, ஃபிரான்சில் பிறந்த மிர்ரா அல்ஃபாஸா அவர்களே இக்கருத்தாக்கத்திற்கு உறுதியான வடிவத்தை தந்து, “ஆரோவில்” என்று பெயரிட்டவர். அப்போது அவர் கீழ்க்கண்டவாறு விளக்கமளித்தார்.

> *“அனைத்து நாடுகளையும் சேர்ந்த ஆண்களும், பெண்களும், அனைத்து சமயங்கள், அனைத்து அரசியல் மற்றும் அனைத்து தேசிய அடையாளங்களைக் கடந்து, சமாதானத்திலும் மற்றும் வளர்ச்சிபெறும் ஒத்திசைவுடனும் வாழ்வதற்கேற்ற உலகளாவிய நகராகத் திகழ ஆரோவில் விரும்புகிறது. மனித ஒருமைப்பாட்டை அடைவதே ஆரோவில்லின் இலட்சியம் ஆகும்.”*

ஆரோவில் குறித்து, 1965–இல் வெளியிடப்பட்ட முதல் பொது அறிக்கை இதுவே ஆகும். பிறகு, 1966-ஆம் ஆண்டில் ஆரோவில் கருத்தாக்கமானது, இந்திய அரசால், யுனெஸ்கோவின் பொதுச்சபையின் முன்பாக வைக்கப்பட்டு, ஒருமனதாக அதன் அங்கீகாரத்தைப் பெற்றது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் நாள், இந்த நகரத்தை துவக்குவதற்காகவும், ஆரோவில்லின் சாசனத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும், 124 நாடுகளிலிருந்தும் மற்றும் அனைத்து இந்திய மாநிலங்களிலிருந்தும் பிரதிநிதிகளாக இளைஞர்கள் வருகை தந்தனர். ஆரோவில்லின் சாசனம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

1. ஆரோவில், குறிப்பிட்ட எவருக்கும் சொந்தமானதல்ல. ஆரோவில் மனித இனம் முழுமைக்கும் சொந்தமானதாகும். ஆனால், ஆரோவில்லில் வசிக்கவேண்டும் என்று ஒருவர் விரும்பினால், அவர் தெய்வீக உணர்விற்கு விருப்பத்துடன் தொண்டு செய்பவராக இருக்கவேண்டும்.
2. ஆரோவில் முடிவுறாத கல்வி, இடையறாத முன்னேற்றம், மூப்புறாத இளமை ஆகியவற்றின் இருப்பிடமாக விளங்கும்
3. ஆரோவில் சென்ற காலத்திற்கும், வருங்காலத்திற்கும் இடையே ஒரு பாலமாக இருக்க விழைகின்றது. புற உலக, அக உலகக் கண்டுபிடிப்புகள் அனைத்தையும் பயன்படுத்தியபடி ஆரோவில்லானது துணிவுடன் எதிர்கால நன் முடிவுகளை நோக்கித் துடிப்புடன் முகிழ்த்து எழும்.
4. ஆரோவில் மனிதகுல ஒருமைப்பாட்டிற்கு ஓர் உருவம் கொடுப்பதற்கான உலகியல் மற்றும் ஆன்மிக ஆராய்ச்சிக்களுக்குரிய நிலையமாக விளங்கும்.

இதேவேளையில் யுனெஸ்கோ, இத்திட்டத்திற்கு தனது ஒருமனதான ஆதரவை மீண்டும் வெளிப்படுத்தியதோடு, 1970 மற்றும் 1983-ஆம் ஆண்டுகளிலும் திரும்பவும் தனது ஆதரவை தெரிவித்தது. 1988-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒரு நாடாளுமன்ற மசோதாவின் கீழ் “ஆரோவில் நிறுவனம்” (ஆரோவில் பவுண்டேஷன்) உருவாக்கப்பட்டு, இந்திய அரசால் இதற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டது. ஆரோவில்லிற்காக தேர்வு செய்யப்பட்ட இடம், கடலை நோக்கி கிழக்காக விரிகின்ற மற்றும் தீவிர மண் அரிப்பால் பாதிக்கப்பட்ட இடமாக இருந்தது. இப்பகுதியின் சுற்றுச்சூழலை மறுஉருவாக்கம் செய்வதும், இந்நிலப்பரப்பில் மரம், தாவரங்கள் அடங்கிய காடுகளை மீண்டும் உருவாக்குவதுமே இத்திட்டத்தின் தொடக்க முன்னுரிமையாக இருந்தது. இதன் விளைவாக, ஒரு பசுமையான மற்றும் பரவலாக காடுகள் காணப்படும் நிலப்பரப்பாக தற்போது இந்த பகுதி விளங்குகிறது. இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டபோதே, சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத மற்றும் பொருத்தமான தொழில்நுட்பம் மற்றும் நிலைத்திருக்கக்கூடிய ஆற்றல் உருவாக்கல் அமைப்புகளை பயன்படுத்தி நகரை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

### இன்றைய ஆரோவில்

நகருக்கான பெருந்திட்டம், வளைவான பிரபஞ்ச வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு, நான்கு பிரிவுகளை உள்ளடக்கியிருப்பதோடு, (பன்னாடு, பண்பாடு, தொழிற்கூடம், மற்றும் குடியிருப்பு மண்டலங்கள்), சுற்றிலும் பசுமையான நிலப்பரப்பு பகுதியையும் கொண்டுள்ளது. இந்த நான்கு பகுதிகளின் மையத்தில், ‘ஆரோவில்லின் ஆன்மா’ எனப்படும் ‘மாத்ரிமந்திர்’ ஒரு பெரிய கோள வடிவ அமைப்பில் அமைந்துள்ளது. இந்த இடம், அமைதியாக மனதை ஒருமுகப்படுத்துவதற்கான இடமாகும். மாத்ரிமந்திரைச் சுற்றி அழகு மிளிரும் தோட்டங்கள் சூழ்ந்திருக்கின்றன, மற்றும் இங்கு காலப்போக்கில் ஒரு ஏரி உருவாக்கப்படவுள்ளது.

இன்றைக்கு ஆரோவில்லில், இந்தியா உட்பட சுமார் 50 நாடுகளைச் சேர்ந்த ஏறக்குறைய 2700 குடியிருப்புவாசிகள் உள்ளனர். இவர்கள், ஏறக்குறைய 20 ச.கி.மீட்டர் பரப்பில் பல்வேறு அளவு மற்றும் அமைப்புகளுடன் உருவாக்கப்பட்ட 120-க்கும் மேற்பட்ட குடியிருப்பு பகுதிகளில் வசிக்கின்றனர். வேளாண்மை மற்றும் பசுமையாக்கப் பணிகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கல்வி, நலவாழ்வு, கிராமப்புற சேவை நடவடிக்கைகள், கட்டுமானப்பணி, மின்னணுவியல், வர்த்தகம், கலை மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் ஆரோவில் சமூக குடியிருப்புவாசிகள் ஈடுபாட்டுடன் பணியாற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் இந்திய ரூபாயில் மாதாந்திர அடிப்படை ‘பராமரிப்புத்’ தொகையைப் பெறுகின்றனர் அல்லது இத்திட்டத்திற்கான பங்களிப்பாக, தங்களுடைய சொந்த ஆதாரங்களிலிருந்து அவர்களுடைய பராமரிப்பிற்கான, ஒரு பகுதியை அல்லது முழுத்தொகையையும் அளிக்கும் தன்னார்வலர்கள் ஆவர்.

கீழ்க்கண்ட 5 ஆதாரங்கள் மூலமாக ஆரோவில்லிற்கான பொது நிதி பெறப்படுகிறது: இந்திய அரசு; இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த அரசு சாரா நிறுவனங்கள்; உலகின் 33 நாடுகளில் உள்ள ஆரோவில் பன்னாட்டு மையங்கள்; ஆரோவில்லின் பல வர்த்தக/ தொழில் அமைப்புகளின் இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம்; இத்தனித்துவமான பரிசோதனை வழியாக செய்யப்பட முயற்சிக்கப்படுவதன் உலகளாவிய மதிப்பினை புரிந்துகொள்கிற, உலகெங்கிலும் உள்ள ஆரோவில்லின் ஆதரவாளர்கள்; மற்றும் ஆரோவில்வாசிகளால் அளிக்கப்படும் குறிப்பிடத்தக்க அளவு நிதி ஆகியவையே இந்த ஆதாரங்கள் ஆகும்.

### ஆரோவில்லின் முக்கியத்துவம் மற்றும் சேவை செயல் நடவடிக்கைகள்

வளர்ந்துவரும் இந்நகரின் தேவைகளை மட்டும் அல்லது அதைச் சுற்றியுள்ள பூகோள நிலப்பரப்பை சேர்ந்தவர்களின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வது என்பதோடு, ஆரோவில்லின் பணி அடக்கப்படவில்லை. ஆரோவில்லானது, முழு மனித இனத்திற்கான ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைக்கான மையமாகவும் தன்னையே கருதுகிறது. நிலைத்திருக்கக்கூடிய நடைமுறை செயல்பாடுகளில் ஆராய்ச்சி என்பதோடு மட்டுமின்றி, அனைத்து மக்களுக்கும், அனைத்து நாடுகளுக்கும் பயனளிக்கக்கூடிய, நடைமுறை சாத்தியமுள்ள மனித ஒருமைப்பாட்டுக்கான அமைப்பு ஒன்றை முதன் முதலாக இந்த பூமியில் உருவாக்குவதே தனது செயல்திட்டம் என்று ஆரோவில் கருதுகிறது. ஆரோவில், தனது சுற்றுச்சூழல் சார்ந்த பணிகளுக்காக ஏற்கனவே தேசிய அளவிலும், மற்றும் சர்வதேச அளவிலும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. பல நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன; இந்த பிராந்தியத்திற்கே உரிய தாவரங்களும், விலங்குகளும் மறு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன அல்லது அவை இயற்கையாகவே மீண்டும் திரும்பி வந்துள்ளன; தாவரப் பூங்காக்கள்; மரக்கன்றுகளுக்கான நாற்றுப் பண்ணைகள் மற்றும் விதை வங்கிகள் ஆகியவையும் நிறுவப்பட்டுள்ளன; மண் பாதுகாப்பு மற்றும் நீர் சேமிப்புக்கான நடைமுறைகளும் விரிவாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பூச்சிக்கொல்லிகள் மற்றும் நச்சுத்தன்மை வாய்ந்த வேதிப்பொருட்களை பயன்படுத்தாமல், சுற்றுச்சூழலுக்கு நன்மை விளைவிக்கும் வேளாண்மை நடைமுறைகளும், சமீபத்திய வேளாண்-வன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகளில், நிலத்தடி நீரை அளவிற்கு அதிகமாக எடுப்பதால், உப்புநீர் கலப்பதன் அபாயங்கள் குறித்து விழிப்புணர்வை உருவாக்கும் பணியிலும் ஆரோவில் ஈடுபட்டுள்ளது. குறைந்த அளவு நீரைச்சார்ந்து மேற்கொள்ளப்படும் வேளாண் நடைமுறைகளை அடையாளம் காணவும் மற்றும் அவற்றை அறிமுகப்படுத்தவும் விவசாயிகள் சங்கங்களுடன் சேர்ந்து ஆரோவில் பணியாற்றி வருகிறது மற்றும் திறன்மிக்க நுண்ணுயிர்-தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதை முன்னிலைப்படுத்தி வருகிறது.

உரிய தொழில்நுட்பத்தை, குறிப்பாக கட்டிடங்களுக்கு ஃபெரோசிமெண்ட் பயன்படுத்தும் தொழில்நுட்பம் - உருவாக்குவதில் அரும்பணியாற்றியுள்ள அறிவியல் ஆராய்ச்சி மையம் (CSR) என்ற அமைப்புக்கு, அதன் மேம்பாட்டுப் பணிகளுக்காக 1984 முதல், இந்திய அரசால் ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இது, ஆரோவில் எர்த் இன்ஸ்டிடியூட் (AEI), இணைந்து எதிர்கால நோக்கங்களுக்கான செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு மற்றுமொரு முக்கிய மையமாக செயல்படுகிறது. ஆரோவில் எர்த் இன்ஸ்டிடியூட் பயிற்சித் திட்டங்களை மேற்கொள்வதுடன், ஆலோசனை வழங்குதல், கட்டிடங்கள் வடிவமைப்பு ஆகிய பணிகளோடு, இந்நிறுவனமே உருவாக்கிய, சிக்கனமான - அழுத்தப்பட்ட மண் செங்கல் தொழில்நுட்பத்தை பின்பற்றி செய்யப்படும் கட்டுமானப் பணிகளை மேற்பார்வை செய்யும் பணியையும் மேற்கொள்கிறது. மண் சார்ந்த கட்டிடக்கலைக்கான யுனெஸ்கோவின் இந்தியா மற்றும் தெற்கு ஆசியாவின் பிரதிநிதியே இந்த அமைப்பின் தலைவராக செயல்படுகிறார். ஆரோவில் இன்ஸ்டிடியூட் ஆஃப் அப்ளைடு டெக்னாலஜி (AIAT) என்பது, உள்ளூர் கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலாப நோக்கமின்றி பயிற்சி வழங்கும் ஒரு பள்ளியாகும். பாண்டிச்சேரியில் உள்ள பாரதி பூங்காவை சீரமைக்கும்

பணியை மேற்பார்வையிட்டதும், தரங்கப்பாடியில் பராம்பரிய வரலாற்று சின்ன கட்டிடங்களை மறுசீரமைப்பு செய்ததும், மற்றும் சென்னையில் உள்ள அடையார் முகத்துவாரப் பகுதியை, ஒரு ஆரோக்கியமான மற்றும் சுற்றுச்சூழல் ரீதியில், நிலைப்புத்தன்மைகொண்ட இயற்கைப் பாதுகாப்பு மையமாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பும் ஆரோவில்வாசிகளால் மேற்கொள்ளப்பட்ட, மிக முக்கியமான சமுதாயப் பணிகளாகும்.

**கல்வி:**

ஆரோவில்லின் பன்முக - கலாச்சார கல்வித் திட்டமானது அதன் 9 பள்ளிகள் வழியாக, ஒவ்வொரு குழந்தையும் தனது உள்ளார்ந்த தன்னிலையை கண்டறியவும் மற்றும் தன்னிடமுள்ள அதிகபட்ச திறனை வெளிக்கொணரவும் முற்படுகிறது. இக்கல்விமுறை, அதிகளவு சுயவிருப்பத் தேர்வின் அடிப்படையிலேயே அமைந்ததாகும். மாணவர்கள் தங்கள் விருப்பதிற்கேற்றபடி பாடங்களைத் தேர்ந்தெடுத்து கல்வி பயில அனுமதிக்கிறது. குழந்தைகளின் சமநிலையான மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சிக்காக, விளையாட்டும், உடற்கல்வியும் வலுவாக ஊக்குவிக்கப்படுவதுடன், அழகுணர்வு திறன்களை உருவாக்குவதற்காக கலைப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. ஆரோவில் பள்ளிகளும், ஆரோவில்லின் கிராமப் பள்ளிகளும் ஸ்ரீ அரவிந்தர் பன்னாட்டு கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் (சையர்) மேற்பார்வையின் கீழ் நடத்தப்பட்டு வருகின்றன.
இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த தன்னார்வ மாணவர்களுக்கு சிறப்பு அக்கறையும், கவனிப்பும் தரப்படுகிறது. இந்நகரத்தால் வெளிக்காட்டப்பட்டு, கண்காணிக்கப்படும் அர்த்தம் நிறைந்த செயல்பாடுகள் மற்றும் கல்வித்திட்டங்கள் இம்மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

மேற்கண்டவற்றுடன், ஆரோவில்லால் நிறுவப்பட்டு, ஆரோவில் கிராமச் செயல்வழிக் குழுக்களின் மேற்பார்வையின்கீழ் இயங்குகிற 6 பகல் அல்லது இரவு பள்ளிகளின் வழியாக, சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த சுமார் 700 குழந்தைகள், ஆரோவில்லின் கல்வித் திட்டங்களிலிருந்து பயன் பெறுகின்றனர்.

**கலை மற்றும் பண்பாடு**

ஆரோவில்லில் வழக்கமாக திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. அத்துடன் ஆண்டுக்கு இருமுறை திரைப்பட விழாவும் நடத்தப்படுகின்றது. அதுமட்டுமல்லாது, நாடகம், இசை, நாட்டியம், சேர்ந்திசை, கவிதை வாசிப்பு, கண்காட்சிகள், பவர்பாய்ண்ட் பிரசண்டேஷன், சொற்பொழிவுகள் ஆகியவையும் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றன. இவையனைத்தும் ஆரோவில்வாசிகளுக்கும் மற்றும் விருந்தினர்களுக்கும் வழக்கமாக இலவசமாக நடத்தப்படுகின்றன. இந்நகரில் உள்ள படைப்புத்திறன் சார்ந்த ஆற்றல் களமானது, கலை சார்ந்த வெளிப்பாடுகளுக்கு மிக உகந்ததாகும். இந்தியாவின் பல்வேறு இடங்களில் ஆரோவில்லின் கலை விழாக்களும் மற்றும் கண்காட்சிகளும் தொடர்ந்து அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

**நலவாழ்வு:**

ஆரோவில் குடியிருப்புவாசிகள் மற்றும் கிராமங்களைச் சேர்ந்த நோயாளிகள் ஆகிய இருவருக்கும் வழங்கப்படுகிற அலோபதி மற்றும் பல் மருத்துவம் போன்றவற்றுடன், ஹோமியோபதி, ஆயுர்வேதம், பிசியோதெர.ஃபி, நேச்சுரோபதி, அக்குபஞ்சர், மசாஜ் மற்றும் பிற சிகிச்சை முறைகள் உட்பட அடிப்படை சுகாதார மருத்துவத்திற்கான வேறுபல மாற்று முறைகளும் இங்கு பயன்படுத்தப்படுகின்றன.

குயிலாப்பாளையம் கிராமம் அருகே அமைந்துள்ள அடிப்படை மருத்துவ வசதிகளுடன் கூடிய ஆரோவில் சுகாதார மையமானது, தனது பிரதான கட்டிடம் மற்றும் கிராமங்களில் உள்ள 7 துணை மையங்கள் வழியாகவும் தினந்தோறும் ஆரோவில் சமூகத்தினருக்கும் மற்றும் சுமார் 200 உள்ளூர் நோயாளிகளுக்கும், மருத்துவ சேவையினை வழங்கி வருகிறது. மேலும், ஆரோவில்லால் பயிற்சியளிக்கப்பட்ட 30-க்கும் அதிகமான உள்ளூர் பெண் சுகாதாரப் பணியாளர்கள், சுற்றியுள்ள 17 கிராமங்களில் முதலுதவி, வீட்டிலேயே சிகிச்சை செய்து கொள்வதற்கான அறிவுரைகள், அடிப்படை சுகாதாரக் கல்வி போன்றவற்றை அளிப்பதுடன், கிராமங்களில் குடும்பத்திற்கான சிறிய காய்கறி தோட்டங்களை வளர்ப்பதன் வழியாக, சிறந்த ஊட்டச்சத்தைப் பெறுவதற்கான அவசியத்தை ஊக்குவித்து வருகின்றனர்.

**சமூக நிறுவனங்கள்:**

ஆரோவில்லில் 180 வர்த்தக / வணிக நிறுவனங்களும் மற்றும் 70 சேவை நிறுவனங்களும் தற்போது இயங்கி வருகின்றன. கைவினைப் பொருட்கள், வரைவ வடிவமைப்பு மற்றும் அச்சிடுதல், உணவு பதப்படுத்துதல், மின்னணு மற்றும் பொறியியல், உலோக வேலைப்பாடு, காற்றாலை உற்பத்தி, ஆடைகள் உற்பத்தி மற்றும் பேஷன், கணினி சேவைகள், கட்டிட கட்டுமானம் மற்றும் கட்டிட வடிவமைப்பு போன்ற பணிகள், வர்த்தக ரீதியிலான நிறுவனங்களது செயல்பாடுகளுள் அடங்கும். நகரில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளுக்காக தங்கள் லாபத்தில் மூன்றில் ஒரு பங்கை அல்லது அதற்கும் அதிகமாக வழங்குகின்ற இந்நிறுவனங்கள், நகரின் நடப்பு முன்னேற்றத்திற்காகவும் மற்றும் அதன் அடிப்படை சேவைகள் மற்றும் கட்டமைப்பை பராமரிப்பதற்காகவும் பங்களிப்பை வழங்கி வருவதுடன், உள்ளூர் கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான நபர்களுக்கு வேலைவாய்ப்பும், பயிற்சியும் அளித்து வருகின்றன. தற்போது, ஆரோவில்லில் சுமார் 5000 உள்ளூர் மக்கள் பணிபுரின்றனர்.

**நிர்வாக அமைப்பு**

ஆரோவில் நிறுவனத்தில் (பவுண்டேஷன்) மூன்று தனித்தனியான ஆனால், ஒன்றாக பணிபுரியும் அமைப்புகள் உள்ளன. ஆரோவில்லில் தங்கியிருக்கும் ஒரு செயலரைக் கொண்ட நிர்வாகப் பேரவை, ஒரு பன்னாட்டு ஆலோசனைக் குழு, ஆரோவில்வாசிகள் அவை ஆகியவை இந்த அமைப்புகளாகும். 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள, மாஸ்டர் லிஸ்ட்டில் (ஆரோவில்வாசிகள் பெயர்ப் பதிவேடு) பெயர் இடம்பெற்ற அனைவரும் ஆரோவில்வாசிகள் அவையின் உறுப்பினர்கள் ஆவர். நகரத்தின் அடிப்படை நிர்வாக தேவைகளைப் பூர்த்திசெய்ய அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்ற விரும்புகின்ற தன்னார்வலர்களிலிருந்து, சில ஆண்டுகளுக்கு ஒரு முறை 'ஆரோவில் அவை' மற்றும் 'ஆரோவில் செயற்குழு' போன்ற அமைப்புகளுக்கான உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். பெரும்பாலான முக்கிய முடிவுகள், குறிப்பாக சர்ச்சைக்குரிய விஷயம் குறித்த முடிவுகள் பொதுக் கூட்டங்களிலேயே எடுக்கப்படுகின்றன அல்லது அதிகளவு அதிகாரபூர்வ விஷயங்களாக இருக்குமானால், அவை குறித்த முடிவுகள் ஆரோவில்வாசிகள் அவையில் (ரெசிடென்ஸ் அசெம்பிளி) எடுக்கப்படுகின்றன.

**பார்வையாளர் மையம்**

பல்வேறு தரநிலைகளையும் பாணிகளையும் கொண்டுள்ள பல விருந்தினர் இல்லங்கள் ஆரோவில்லில் உள்ளன. பகல் நேரத்தில் வருகை தரும் நபர்களுக்கு பார்வையாளர் மையத்தில் அமைந்திருக்கும் அதன் தகவல் மையம், பல்வேறு கண்காட்சிகள், காணொளி காட்சிகள், ஆடையகங்கள் மற்றும் 2 உணவகங்கள், ஒரு காபி ஷாப் ஆகியவை வழியாக முழுமையான தகவலைப் பெறலாம். இந்நகரின் நோக்கங்கள் மற்றும் சாதனைகள் குறித்த தகவல்கள் இங்கு வரும் பார்வையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

***ஆரோவில், குறித்த மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து www.auroville.org-ஐ காணவும் அல்லது தொடர்பு கொள்ளவும்: அவுட்ரீச் மீடியா, மல்டிமீடியா மையம், ஆரோவில் 605 101, தமிழ்நாடு, இந்திய, மின்னஞ்சல்: outreachmedia@auroville.org.in.*** *(2017 ஜுன்)*